# Indian Polity Notes Part 14 in Tamil

## 14] கூட்டுறவு சங்கங்கள்

**(பகுதி – IX –B) (சரத்துக்கள்: 243 – ZH முதல் 243 – ZT)**

இப்பகுதி 97 – வது அரசியலமைப்புவ் சட்டத்திருத்தத்தின் படி (2011) புகுத்தப்பட்டது.

**வரையறை (சரத்து 243 ZH)**

- **அங்கீகரிக்கப்பட்ட நபர்** என்பது சரத்து 243 – ZQ ல் குறிப்பிடப்பட்டவர்.
- **வாரியம்** – இயக்குனர்கள் வாரியம் அல்லது கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்கும் அமைப்பு.
- **பல மாநில கூட்டுறவு சங்கங்கள்** - கூட்டுறவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட, ஒரு மாநிலத்திற்கு மட்டும் பொருந்தாத சங்கம்.
- **அலுவலக நிர்வாகிகள்** – கூட்டுறவு சங்கத்தின் தலைவர், துணைத் தலைவர், செயலர், பொருளாளர்.
- **பதிவாளர்** – பல மாநில கூட்டுறவு சங்கங்களுக்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட மத்திய பதிவாளர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்பட்ட பதிவாளர்.
- **மாநில கூட்டுறவு சங்கம்** – ஒரு மாநிலத்தின் முழு எல்லைக்கும் செயல்படும் சங்கம்.

**வாரியம் மற்றும் அதன் அலுவலக நிர்வாகிகளின் பதவிக் காலம் எண்ணிக்கை (சரத்து 243 ZJ)**

- இயக்குனர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் மாநில சட்டமன்றத்திடம் உள்ளது. ஆனால் இயக்குனர்களின் எண்ணிக்கை 21 பேருக்கு மேல் இருக்கக் கூடாது.
- இதில் ஒரு இடம் பட்டியல் இனத்தவருக்கு அல்லது பழங்குடி மக்களுக்கு ஒதுக்கவேண்டும்.
- 2 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- வாரியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்.
- வாரியத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பாதிக்கும் குறைவாக இருந்தால் அந்தக் காலி இடங்களை அதே வகுப்பினரை நியமித்தல் மூலம் நிரப்பலாம்.
- வங்கி, மேலாண்மை, நிதி அல்லது கூட்டுறவு சங்க செயல்களி சிறப்புத் தகுதி பெற்றவர்களை வாரிய உறுப்பினராக நியமிக்க மாநில சட்டமன்றம் வகை செய்ய வேண்டும்.
- ஆனால் அவர்களின் எண்ணிக்கை இரண்டிற்கு மேல் இருக்கக் கூடாது.
- அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் கூட்டுறவு சங்கத் தேர்தலில் வாக்களிக்க முடியாது.
- வாரியத்தின் அலுவலக நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்க தகுதியற்றவர்கள்.
- கூட்டுறவு சங்கத்தின் செயல் இயக்குநர்களும் வாரிய உறுப்பினர்கள்தான் ஆனால் அவர்கள் 21 உறுப்பினர்களுள் அடக்கம் ஆகாது.

**வாரிய உறுப்பினர்கள் தேர்தல் (சரத்து 243 ZK)**

- வாரியத்தின் பதவிக் காலம் முடியும் முன் தேர்ல் நடத்தி உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க மாநில சட்டமன்றம் வகை செய்ய சட்டமியற்றலாம்.
- தேர்தல் மேற்பார்வை, இயக்கம், கட்டுப்படுத்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், மேற்பார்வை, இயக்கம், கட்டுப்படுத்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் நடத்துதல் போன்றவை குறித்து மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.
- அத்தேர்தலுக்கான நடத்தை விதிகள், நெறிகளை மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றி செயல்படுத்தலாம்.

**வாரியத்தை நிறுத்தி வைத்தல் மற்றும் இடைக்கால மேலாண்மை (சரத்து 243 ZL)**

- வாரியத்தை 6 மாதத்திற்கு மேல் நிறுத்தி வைக்கக் கூடாது. ஆனால் நிரந்தர செயல்பாடு இல்லா நிலை, கடமையை செயலாற்றுவதில் கவனமின்மை, வாரியம், கூட்டுறவு சங்கம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு எதிராக செயல்படுதல், வாரியத்தின் செயல்பாடுகளிலோ அல்லது அமைப்பிலோ உடன்பாடு இல்லாமல் முரண்பாடு ஏற்பட்டாலோ வாரியத்தை நிறுத்தி வைக்கலாம் அல்லது எடுத்து நடத்தலாம்.
- மாநில சட்டமன்றம், தேர்தல் நடத்த தவறிவிட்டால், வாரியத்தை நிறுத்தி வைக்கலாம் அல்லது எடுத்து நடத்தலாம்.
- அரசின் பங்கு, கடன், நிதி உதவி அல்லது வேறு உதவிகள் இல்லாத கூட்டுறவு சங்க வாரியத்தை நிறுத்தவோ அல்லது எடுத்து நடத்தவோ முடியாது. வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949 – ன்படி செயல்படக்கூடிய கூட்டுறவு சங்கங்கள்.
- பல மாநில கூட்டுறவு சங்கம் தவிர கூட்டுறவு சங்கம் வங்கித் தொழில் செய்வதாக இருந்தால் ஒரு வருடத்திற்கு மேல் நிறுத்தி வைக்கக் கூடாது.
- வாரியத்தை எடுத்து நடத்தும்போது, மேலாண்மைக்கு நிர்வாகியை நியமிக்க வேண்டும். அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கூட்டுறவு சங்க கணக்கு தணிக்கை (சரத்து 243 ZM)**

- ஒவ்வொரு நிதி ஆண்டிலும் கூட்டுறவு சங்கங்களின் கணக்கு நிர்வாகம் மற்றும் தணிக்கை குறித்து மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.
- கூட்டுறவு சங்க கணக்கு தணிக்கை செய்யும் தணிக்கையாளருக்கு குறைந்தபட்ச தகுதியை சட்டமன்ற சட்டம் மூலம் நிர்ணயம் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் நிதியாண்டு முடிந்து 6 மாதத்திற்குள் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

- மத்திய/தலைமை கூட்டுறவு சங்கத்தின் கணக்குத் தணிக்கை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

**பொதுக்குழுக் கூட்டம் (சரத்து 243 ZN)**

- ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நிதி ஆண்டு முடிவுற்று 6 மாதத்திற்குள் நடைபெற மாநில சட்டமன்றம் சட்டத்தின் மூலம் வகை செய்யலாம்.

**உறுப்பினர்களின் தகவல் பெறும் உரிமை (சரத்து 243 ZO)**

- கூட்டுறவு சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் தகவல்கள், கணக்குகள் குறித்து தகவல் பெற சட்டமன்றம் வகை செய்யலாம்.
- கூட்டுறவு சங்க மேலாண்மையில் உறுப்பினர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.
- உறுப்பினர்களுக்கு கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி அளிக்க சட்டமன்ற சட்டம் முலம் வகை செய்யலாம்.

**அறிக்கை (Return) (சரத்து 243 ZP)**

ஒவ்வொரு கூட்டுறவு சங்க அறிக்கையை நிதியாண்டு முடிந்து 6 மாதத்திற்குள் மாநில அரசு நியமிக்கும் அதிகார அமைப்பிடம், சமர்ப்பிக்க வேண்டும்.

- செயல்பாடுகள் குறித்த வருடாந்திர அறிக்கை
- கணக்குத் தணிக்கை அறிக்கை
- பொதுக்குழு அங்கீகரித்த உபரி திட்டம்
- விதிகளில் சட்டத்திருத்தம் ஏதேனும் இருந்தால்
- பொதுக் குழு கூட்டத் தேதி
- பதிவாளர் வேண்டுகிற வேறு தகவல்கள்.

**குற்றம் மற்றும் தண்டனை (சரத்து 243 ZQ)**

கூட்டுறவு சங்கம் தொடர்பான குற்றங்கள் மற்றும் அதற்கானத் தண்டனைக்ள் தொடர்பாக மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.

**பின்வரும் செயல்கள் குற்றங்களாகும்**

- கூட்டுறவு சங்கம் அல்லது உறுப்பினர்கள் தவறான அறிக்கை, தவறான தகவல், தேவைப்படும் தகவல்களை சமர்பிக்காமல் இருப்பது.
- அழைப்பானை, வேண்டுகோள் அல்லது சட்டப்பூர்வ ஆணையைக் காரணமில்லாமல் மதிக்காமல் இருப்பது.

- முதலாளி, போதிய காரணம் இல்லாமல், கூட்டுறவு சங்க பணத்தை பணியாளரிடமிருந்து கழிக்கப்பட்ட பணத்தை, கழிக்கப்பட்ட தேதியிலிருந்து 14 நாட்களுக்குள் செலுத்த தவறினால்.
- பொறுப்பாளராக உள்ள அதிகாரி வேண்டுமென்றே, கூட்டுறவு சங்கத்திற்குரிய புத்தகம், கணக்கு, ஆவணங்கள், பதிவுகள், பணம் மற்றும் வேறு சொத்துகளை ஒப்படைக்க தவறினால் அதிகாரமளிக்கப்பட்ட நபரிடம்.
- வாரிய உறுப்பினர் அல்லது அலுவலக நிர்வாகிகள் தேர்தலுக்கு முன், தற்போது, அல்லது பின் ஏதேனும் ஊழல் நடவடிக்கை மேற்கொண்டால்

**பல மாநில கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை (சரத்து 243 ZR)**

- இப்பகுதி பல மாநில கூட்டுறவு சங்கங்களுக்கு, மாநில சட்டமன்றம், மாநில சட்டம், மாநில அரசு, நாடாளுமன்றம், மத்திய சட்டம், மத்திய அரசு செய்யக்கூடிய வகைமுறைகளுக்கு ஏற்ப பொருந்தும்.

**யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை (சரத்து 243 ZS)**

- யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக் கூடியதை குடியரசுத் தலைவர் அறிவிப்பார்.

**நடைமுறையில் உள்ள சட்டங்கள் (சரத்து 243 ZT)**

97 வது சட்டத் திருத்தம் (2011) அமலுக்கு வருவதற்கு முன்பு மாநிலங்களின் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான ஏதேனும் சட்டங்கள் இருந்தால் தகுதி வாய்ந்த சட்டமன்றம் ரத்து செய்யும் வரையிலோ அல்லது அமலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு ஆண்டு வரையிலோ (எது முதலில் வருகிறதோ) நடைமுறையில் இருக்கும்.